DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.346/2019

PROSECUTION WITNESS L.W.5/P.W.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிவர்மன் | தகப்பனார் பெயர் | அர்ஜூனன் |
| கிராமம் | சத்தியமங்கலம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 06.11.2025.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது, ஈரோடு சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன்.

2) இரசீத்தை எனக்கு தெரியும். தேதி ஞாபகம் இல்லை. கடந்த 2006 ம் ஆண்டு சத்தியமங்கலத்தில் இருந்து நானும் எனது நண்பர்களான குமார், இரசீத், பாபு ஆகியோர் புறப்பட்டு வ.உ.சி பூங்காவில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் கலந்து கொள்வதற்காக ஈரோடு வந்தோம். காலை 11.00–12.00 மணி வரை நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் நாங்கள் அனைவரும் கலந்து கொண்டோம். விளையாட்டு போட்டி முடிந்தவுடன் பூங்காவில் இருக்கும் நீச்சல் குளத்திற்கு சென்றோம். எனக்கும் இரசீத்துக்கும் நீச்சல் தெரியாததால் நாங்கள் இருவரும் குளத்தில் இறங்கவில்லை, என்னுடன் வந்த மற்றவர்கள் குளத்தில் இறங்கி குளித்துக் கொண்டிருந்தார்கள். இரசீத் அந்த சமயத்தில் எனது பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். ஈரோடு எனக்கு புதுசு என்பதால் நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னிட்டு பார்த்தபோது எனது அருகில் அமர்ந்திருந்த இரசீத்தை காணவில்லை. நான் இரசீத்தை தேடி பார்த்தேன். அப்போது அவர் நீச்சல் குளத்தின் ஆழமான பகுதியில் பேச்சு மூச்சில்லாமல் கிடந்தார். அருகில் இருந்தவர்கள் அவரை நீச்சல் குளத்தில் இருந்து மேலே கொண்டு வந்து முதலுதவி

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.06 19:11:37 +0530

செய்தபோது கண் திறந்திருந்தது, உயிர் இல்லை. உடனே ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது அவரை பரிசோதித்த மருத்துவர் இரசீத் இறந்துவிட்டதாக கூறினார்கள். நீச்சல் தெரியாததால் இரசீத் இறந்துவிட்டார். அருகில் இருந்த நீச்சல்குளத்தை கண்காணிப்பவர்கள் பார்த்திருந்தால் அவரை காப்பாற்றி இருக்கலாம். அவர்களை தற்போது பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் Friends of Police ஆக இருக்கிறேன் என்றால் ஆமாம். நான் சொன்ன அந்த தேதியில் விளையாட்டு போட்டிகள் நடந்து கொண்டிருந்தது என்றால் ஆமாம். வஉசி பூங்காவில் விளையாட்டு போட்டிகள் நடைபெறும்போது நீச்சல் குளத்தை திறந்து வைக்கமாட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரசீத்துக்கு நீச்சல் தெரியாது என்றால் அவருக்கு நீச்சல் தெரியாது. அன்றைய தினம் நீச்சல் குள காப்பாளர்கள் பார்த்திருந்தால் இரசீத்தை காப்பாற்றியிருக்கலாம் என வழக்கிற்காக நான் கூறியுள்ளேன் என்றாலும், Friends of Police ஆக இருப்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.06 19:11:41 +0530

Judicial Magistrate No.I,

Erode.